1. **பதவி** – புனர்வாழ்வு அலுவலர்
2. **வயது** - 22 வயதுக்குக் குறைவாயதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்சளவான வயதெல்லை ஏற்புடையதல்ல.
3. **தகைமை**

**அ. வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. ஆலோசனை உளவியல் / உளவியல் / சமூகவியல் / குற்றவியல் அல்லது இப்பதவிக்கு ஏற்புடையதான விடயத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல் அத்துடன் பதவிக்குரிய விடயத்துறையில் பட்டப் பின் உயர் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

**இ. ஏனையன**

I. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. பதவிக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற கடமைகளை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் தேவையான உடல்சார் மற்றும் உளவியல் தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

4. **சம்பள நிலை**

நிரந்தர சம்பள அளவுத்திட்டம் - MA 5-2 2025

அடிப்படைச் சம்பளம் - ரூபா 56,899.00 (2026), ரூபா 62,310.00 (2027)

வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா: 17,800 உரித்தாகும்.

| | | |
|---|---|---|
| வருடாந்த சம்பளம் | - 56,899.00+17800.00 x 12 | = ரூபா 896,388.00 (2026) |
| | - 62,310.00+17800.00 x 12 | = ரூபா 961,320.00 (2027) |

**கடமைசார் தன்மை**

i. வதிவிட புனர்வாழ்வுக் காலத்திற்குள் புனர்வாழ்வு பெறுபவர்களை இனங்காணல், புனர்வாழ்வு பெறுபவர்களின் குடும்ப சூழலை தேடிப்பார்த்தல்.
ii. புனர்வாழ்வு பெறுபவர் மற்றும் பெற்றோரை ஒருவருக்கொருவர் தொடர்புபடுத்தல், புனர்வாழ்வு பெறுபவர்களின் பிரச்சினைகள் பற்றி இனங்காணல் மற்றும் மேற்படி சிக்கல்களைத் தீர்த்துவைக்க உதவி வழங்குதல்.
iii. புனர்வாழ்வு பெறுபவர்கள் சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் அவர்களுக்கு சமூகத்தில் நல்ல பிரசையாக வாழ்வதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல், அவர் தொடர்பாக அவரின் நடத்தை முறை பற்றி ஆராய்ந்து தரவுகளைச் சேகரித்தல், மேற்படி தரவுகளை பகுப்பாய்வு செய்து முடிவுகளை எட்டுதல்.
iv. பொருளாதாரம் மற்றும் நலன்புரியை கட்டியெழுப்புதற்கு தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தல், அவர்களுக்கு தேவையான ஆலோசனைச் சேவைகளை வழங்குவதன் மூலம் மீண்டும் பயன்பாட்டில் ஈடுபடுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைத்தல் / தடுத்தல்.
v. பணியகத்தின் அங்கீகாரத்தின் பேரில் தலைமையகம் மற்றும் ஏனைய விசேட நிறுவனங்களுக்கு புனர்வாழ்வு பெறுபவர்களின் / சமூகமயப்படுத்தப்பட்டவர்களின் தரவுகளை வழங்கும் போது மேற்படி தரவுகளின் உண்மைத்தன்மை மற்றும் பாதுகாப்பான தன்மையை உறுதி செய்யும் வகையில் அறிவுப்பூர்வமாக செயற்படுதல்.
vi. புனர்வாழ்வு பெறுபவர்களின் தரவுகளை இற்றைப்படுத்துவதன் மூலம் சமூகமயப்படுத்தப்பட்டு பயிற்சி பெறுபவர்களின் எதிர்கால முன்னேற்றத்தை ஏற்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவர்கள் பற்றிய தொடர்ச்சியான பின்னாய்வு மூலம் தொடர்ச்சியாக பயிலுனர்களின் நலன்புரிக்குத் தேவையான நடவடிக்கைகளை தயார் செய்வதற்காக அரச அரசசார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள செயற்படுதல்.
vii. புனர்வாழ்வு பெறுபவர்களின் / சமூகமயப்படுத்தப்பட்டவர்களின் தரவு முறைமையை சரியாக இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED